AL/2020/22/T-I(OLD)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus)

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள் :**
* இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **I, 30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
* பகுதி **I,** பகுதி **II** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 30 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| | 3 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

## பகுதி I

● ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

**1.** புவியியல் என்பது "புவியின் பரப்புசார் வேறுபாடுகள் பற்றிய ஆய்வு" என வரையறை செய்தவர் யார்?
(1) றிச்சார்ட் ஹாட்சோன்
(2) அலெக்ஸ்சாண்டர் வொன் ஹம்போல்ட்
(3) கார்ல் றிற்றர்
(4) இம்மானுவேல் கான்ட்
(5) டேவிட் ஹார்வே (......)

**2.** பின்வருவனவற்றுள் எது, இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப் படத்தில் கிராம சேவகர் பிரிவின் எல்லையைக் குறிக்கும் (சிவப்பு நிறத்தினால்) சரியான குறியீட்டினை எடுத்துக்காட்டுகின்றது?

(1) +--+--+--+--+ (2) +·+·+·+·+·+·+
(3) –...–...–...– (4) –..–..–..–..–
(5) ---------------- (......)

**3.** குறிப்பிட்டதொரு காலப் பகுதிக்குரிய தரவு வரிசையில் ஏற்படும் தொடர்ச்சியான மாற்றத்தினை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வரைபு முறை,
(1) எளிய பார் வரைபு ஆகும். (2) பல் பார் வரைபு ஆகும்.
(3) வட்ட விளக்கப்படம் (pie) ஆகும். (4) கோட்டு வரைபு ஆகும்.
(5) பாய்ச்சற் படம் ஆகும். (......)

[பக். 2 ஐப் பார்க்க.

**4.** 1 : 50,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்டுள்ள படம் ஒன்றில் 1 சென்ரி மீற்றரின் உண்மையான நீளம் என்ன?
(1) 10 மீற்றர்கள் (2) 50 மீற்றர்கள்
(3) 100 மீற்றர்கள் (4) 500 மீற்றர்கள்
(5) 1000 மீற்றர்கள் (......)

**5.** புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் இடஞ்சார்ந்த தரவுப் பிரிவுகள் மூன்றினை எடுத்துக்காட்டும் சரியான தெரிவு எது?
(1) நிர்வாகப் பிரிவுகள், வீதிகள், பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பளவு
(2) நிர்வாகப் பிரிவுகள், வீதிகள், நகரங்கள்
(3) வீதிகள், நீர்த்தேக்கங்கள், பிரதேசமொன்றின் குடித்தொகை
(4) பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பளவு, குடித்தொகை அடர்த்தி, வீதிகள்
(5) நிர்வாகப் பிரிவுகள், நகரங்கள், பயிரிடப்பட்ட நிலத்தின் பரப்பளவு (......)

**6.** தரவுப் பரம்பல் ஒன்றின் பிரிக்கையை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவீடு
(1) இடை ஆகும். (2) நியம விலகல் ஆகும்.
(3) ஆகாரம் ஆகும். (4) மீடிறன் ஆகும்.
(5) சதமணை ஆகும். (......)

**7.** வெளிக்கள அளவீடு ஒன்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள்
(1) தொடர்ச்சியான தரவுகள் ஆகும். (2) பின்னகத் தரவுகள் ஆகும்.
(3) கூட்டமாக்கப்பட்ட தரவுகள் ஆகும். (4) முதனிலைத் தரவுகள் ஆகும்.
(5) இரண்டாம்நிலைத் தரவுகள் ஆகும். (......)

**8.** பின்வருவனவற்றுள் புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் திறந்த மூலாதார மென்பொருள் யாது?
(1) QGIS (2) MapInfo
(3) ArcView GIS (4) ArcGIS
(5) Global Mapper (......)

**9.** தரவு வரிசை என்பது
(1) குறிப்பிட்ட நோக்கத்துடன் சேகரிக்கப்பட்ட ஒரு தரவுத் தொகுதியாகும்.
(2) அதன் மூல வடிவத்தில் முன்வைக்கப்பட்ட தரவுத் தொகுதியாகும்.
(3) ஓர் ஒழுங்கமைப்பில் நிரல்கள் அல்லது வரிசையில் முன்வைக்கப்படும் தரவுத் தொகுதியாகும்.
(4) ஏற்ற இறக்கங்களை இலகுவில் அவதானிக்கக்கூடிய ஒரு தரவுத் தொகுதியாகும்.
(5) புள்ளிவிபரப் பகுப்பாய்வுக்கு உட்படுத்த முடியாத தரவுத் தொகுதியாகும். (......)

**10.** 1 : 50,000 அளவுத்திட்டப் படம் ஒன்றினை நான்கு மடங்காகச் சிறுப்பிக்கும்பொழுது அதன் புதிய அளவுத்திட்டம் என்னவாக இருக்கும்?
(1) 1 : 12,500 (2) 1 : 25,000
(3) 1 : 200,000 (4) 1 : 400,000
(5) 1 : 500,000 (......)

**11.** தரப்பட்டுள்ள வளி அலகு ஒன்றில் காணப்படும் நீராவியின் அளவானது அவ்வலகு கொள்ளக்கூடிய அதி உச்ச நீராவியின் சதவீதமாக அறியப்படுவது
(1) தனியீரப்பதன் (2) சாரீரப்பதன்
(3) தன்னீரப்பதன் (4) வெப்பஞ்செல்லாநிலைக் குளிர்ச்சி
(5) வெப்பஞ்செல்லாநிலை வெப்பம் (......)

**12.** காலநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கும் மானிட நடவடிக்கைகள் இரண்டினைச் சரியாகக் குறித்துக் காட்டும் தெரிவு எது?
(1) காடுகளை வெட்டியழித்தல் மற்றும் சுவட்டு எரிபொருட்களின் தகனம்
(2) பற்றீரியாக்களின் செயற்பாடு மற்றும் பீடைநாசினிகளின் பயன்பாடு
(3) தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் சூரிய புள்ளிகள்
(4) குளோரோபுளோரோ காபன் வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் எல் நினோவின் செயற்பாடு
(5) குளிர்சாதனப் பெட்டிகளின் பயன்பாடு மற்றும் லா நினாவின் செயற்பாடு (......)

**13.** வரண்ட பகுதிகளில் அரித்தலினால் உருவாக்கப்படும் நிலவுருவங்கள் மூன்றினைச் சரியாக எடுத்துக்காட்டும் விடை எது?
(1) தளத்திடைக்குன்று, காற்றரிபரல், யாடாங்கு
(2) காற்றரிபரல், பிளேயா ஏரிகள், பார்ச்சன்
(3) யாடாங்கு, தளத்திடைக்குன்று, பார்ச்சன்
(4) பீடக்கிடைத்திணிவு, தளத்திடைக்குன்று, பார்ச்சன்
(5) பிளேயா ஏரி, யாடாங்கு, நீள்கோட்டு மணற்குன்றுகள் (……)

**14.** கடல் அலையின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் ஒரு நிலவுருவம் எது?
(1) வாடி (2) மலையிடுக்குகள் (3) குவடு
(4) யாடாங்கு (5) ஹமடா (……)

**15.** இலங்கையில் மயோசீன் காலத்துடன் தொடர்புடையதாக இடம்பெற்ற ஒரு பிரதான புவிச்சரிதவியல் நிகழ்வு,
(1) இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படிதலாகும்.
(2) இந்தியாவிலிருந்து இலங்கை தனியாக்கப்பட்டமையாகும்.
(3) தப்போவைப் படிவுகளின் உருவாக்கமாகும்.
(4) கொண்டுவானாலாந்து பிரிந்து சென்றமையாகும்.
(5) இரத்தினபுரிப் படிவுகளின் உருவாக்கமாகும். (……)

**16.** இலங்கையில் உலர் பத்தனைப் புல்நிலங்களின் அமைவிடத்தினைச் சரியாக எடுத்துக்காட்டும் விடை எது?
(1) வெலிமடை (2) ஹோட்டன் சமவெளி
(3) ஆக்கரப்பத்தனை (4) கல்லோயா
(5) மதுறு ஓயா (……)

**17.** இலங்கையில் அதிகளவு நிலப்பரப்பில் பரவிக் காணப்படும் காலநிலை வலயம் எது?
(1) தாழ்நில ஈர வலயம் (2) தாழ்நில உலர் வலயம்
(3) மலைநாட்டு ஈர வலயம் (4) மலைநாட்டு உலர் வலயம்
(5) அரை வரட்சி வலயம் (……)

**18.** பூகோள வெப்பநிலையின் அதிகரிப்பினால் ஏற்படும் தாக்கம் எது?
(1) ஈர நிலங்களின் கீழ் உள்ள பகுதியில் குறைவு ஏற்படல்.
(2) தரைநீரின் உவரடைதலில் குறைவு.
(3) கடல் மட்டத்தில் உயர்ச்சி
(4) சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலையில் வீழ்ச்சி.
(5) வளிமண்டலத்தின் காபனீரொட்சைட்டின் சேர்க்கையில் அதிகரிப்பு. (……)

**19.** அமுக்கவிசை அசைவுகளினால் உருவாக்கப்படும் ஒரு நிலவுருவம் எது?
(1) பிளவுப் பள்ளத்தாக்கு (2) தொகுதிக் குறை
(3) சாதாரண குறை (4) படிக் குறை
(5) சமச்சாய்வு மடிப்பு (……)

**20.** இலங்கையில் காணப்படும் ஒரு தேசியப் பூங்கா எது?
(1) சிங்கராஜா (2) வில்பத்து (3) புந்தல (4) விக்டோரியா (5) ரித்திகல (……)

**21.** ஐரோப்பிய யூனியனின் இரண்டு அங்கத்துவ அரசுகள் யாவை?
(1) சுவிற்சலாந்து, ஜோர்ஜியா (2) நோர்வே, சுவீடன்
(3) பின்லாந்து, பெல்ஜியம் (4) உக்கிரேய்ன், லக்ஸ்சம்பேர்க்
(5) போத்துக்கல், ஐஸ்லாந்து (……)

**22.** பின்வரும் தெரிவுகளுள் எது, உலகின் இரண்டு பிரதான பால் உற்பத்தி நாடுகளை உள்ளடக்குகின்றது?
(1) ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஸ்பெயின்
(2) நியூசிலாந்து மற்றும் போர்த்துக்கல்
(3) இத்தாலி மற்றும் நியூசிலாந்து
(4) ருஷியா மற்றும் அவுஸ்திரேலியா
(5) டென்மார்க் மற்றும் நெதர்லாந்து (……)

**23.** உலகின் பழங்குடி மற்றும் சுதேசிய மக்களுடன் இணைந்து காணப்படும் ஓர் அண்மைக்காலப் போக்கு
(1) தமது சமூகத்திற்குள் வெளியிலுள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ளல் ஆகும்.
(2) சூழலைப் பேணிப் பாதுகாத்தல் சட்டங்கள் மற்றும் சட்டவிதிகளுக்கு எதிர்ப்புக் காட்டாமை.
(3) தற்பொழுதுள்ள ஆள்புலப் பகுதிகளைக் கைவிட்டு காட்டுக்குள் மேலும் நகர்ச்சி அடைதல்.
(4) ஏனைய பழங்குடிப் பிரிவினருடனான இடைத்தொடர்புகளைக் கைவிடுதல்.
(5) பூகோளமயமாக்கத்துடன் அவர்களின் கலாச்சார அடையாளம் படிப்படியாக மறைந்து வருதல். (……)

**24.** ஒடுங்கிய குடித்தொகைக் கூம்பகம் ஒன்றின் பிரதான அம்சம் யாது?
(1) பெரும்பான்மையான குடித்தொகையின் வயது 15 வருடங்களுக்குக் கீழ் காணப்படும்.
(2) கூம்பகத்தின் அடிப் பகுதி விரிவடைந்து செல்லும்.
(3) பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் குறைந்த பெறுமானங்களைக் காட்டும்.
(4) 65 வயதுக்கு மேற்பட்ட குடித்தொகையின் சத வீதம் மிகக் குறைவு.
(5) குடித்தொகையின் எல்லா வயதுப் பிரிவினரும் சம அளவில் உள்ளனர். (……)

**25.** கண்டி நகரம் எந்த பிரதான தொழிற்பாட்டு வகையினுள் சேர்க்கப்படுகின்றது?
(1) நிர்வாகம் (2) வாழிடம் (3) வர்த்தகம்
(4) கைத்தொழில் (5) கலாச்சாரம் (……)

**26.** இலங்கையில் காணப்படும் பின்வரும் பயிர்களில், பயிர்செய்கையின் கீழ் குறைந்தளவான பகுதியைக் கொண்டிருக்கும் பயிர் எது?
(1) நெல் (2) தெங்கு (3) தேயிலை
(4) இறப்பர் (5) கலப்புப் பயிர்கள் (……)

**27.** ஐக்கிய அமெரிக்காவின், 'சிலிக்கன் பள்ளத்தாக்கில்' மிகச் செல்வாக்குமிக்க பரும்படியாக்கக் கைத்தொழில் எது?
(1) உயர் - தொழில்நுட்பக் கைத்தொழில்
(2) மோட்டார் வாகனக் கைத்தொழில்
(3) கப்பல் கட்டும் கைத்தொழில்
(4) இரசாயனக் கைத்தொழில்
(5) உணவினைத் தகரத்திலடைக்கும் கைத்தொழில் (……)

**28.** இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கான இடப்பெயர்வு என்பது
(1) மூளைசாலிகள் வெளியேற்றத்துக்கான ஒரு சிறந்த உதாரணமாகும்.
(2) சட்டரீதியற்ற ஓர் இடப்பெயர்வாகும்.
(3) குறிப்பிட்ட இனப்பிரிவினருக்கென வரையறுக்கப்பட்டதாகும்.
(4) நிரந்தரமான ஒரு இடப்பெயர்வாகும்.
(5) வெளிநாட்டு நாணயமாற்று உழைப்புக்கான ஒரு மூலமாகும். (……)

**29.** உலகில் அதிக எண்ணிக்கையிலான அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்திய நிறுவனம் யாது?
(1) தென் கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)
(2) ஐரோப்பிய யூனியன் (EU)
(3) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென் ஆசிய சங்கம் (SAARC)
(4) ஆபிரிக்காவுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார ஆணைக்குழு (UNECA)
(5) வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) (……)

**30.** 'e-Sri Lanka' என்பது,
(1) வங்கிச் சேவைகளில் பணப் பரிமாற்றங்களை மேம்படுத்துவதற்கு உதவும் ஒரு முறைமையாகும்.
(2) விவசாயிகளுக்கு இடையே பரிமாற்றங்களை விருத்தி செய்வதற்கு அமுலாக்கப்படும் ஒரு முறைமையாகும்.
(3) மென்பொருள் பொதிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும்.
(4) கலைக்களஞ்சியம் மற்றும் அகராதிகளைக் கொண்டிருக்கும் ஒரு வலைக் கலப்பிடம் (Web site) ஆகும்.
(5) தகவல் தொழில்நுட்பத்தினை அமுலாக்குவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு கொள்கை வரைச்சட்டகமாகும். (……)

* *

[பக். 5 ஐப் பார்க்க.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**

※ **முதலாம்** வினாவுக்கும் **2** ஆம் **3** ஆம் வினாக்களிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்தெடுத்து **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம்** விடை எழுதுக.

※ 1 : 50,000 அளவுத்திட்டத்திலமைந்த தம்புள்ளை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் இலங்கை மாவட்ட புறவுருவப் படம் ஒன்றும், வரைபுத்தாள் ஒன்றும் உமக்கு வழங்கப்பட்டுள்ளது.

**1.** இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1:50,000** அளவுத்திட்டத்தில் அமைந்த இரத்தினபுரி இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :

※ விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும்** அதன் உப பிரிவு **இலக்கத்தினையும்** தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

※ **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**

※ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க **வேண்டாம்.**

(i) படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவு ஒன்றினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) **A** மற்றும் **B** சதுரங்களுக்குள் காட்டப்பட்டுள்ள வடிகால் அம்சங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) **C - D** மற்றும் **E - F** கோடுகளினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள பள்ளத்தாக்கு வகைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) **G - H, J - K, L - M** மற்றும் **N - O** கோடுகள் ஒவ்வொன்றினாலும் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிலத்தோற்ற அம்சங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(v) நாற்பக்கல் **P** இன் உள்ளே காணப்படும் விவசாய நிலப்பயன்பாட்டு வகைகள் **ஆறினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(vi) படப் பகுதியில் காணப்படும் முனைப்பான வடிகால் பாங்கினைப் பெயரிட்டு வடிகால் பாங்கிற்கும் தரைத்தோற்றத்திற்கும் இடையிலான தொடர்பினை **இரண்டு** ஆதாரங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(vii) படப் பகுதியின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் காணப்படும் விவசாயம், குடியிருப்புக்கள் மற்றும் வீதி வலைப்பின்னல் ஆகியவற்றை ஒப்பீட்டுரீதியாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

**2.** (i) 'படம்' என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) நவீன படவரைகலையியலின் பரந்தளவான பயன்பாட்டுக்குப் பங்களித்த **ஆறு** காரணிகளைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iii) நவீன படவரைகலையியலில் பயன்படுத்தப்படும் **மூன்று** தொழில்நுட்ப முறைகள் ஒவ்வொன்றினதும் **இரண்டு** பயன்பாடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) மேலே இல. (iii) இல் விளக்கப்பட்ட தொழில்நுட்ப முறைகளுள் **ஒன்றினைத்** தெரிவுசெய்து அதன் பயன்பாட்டின் போது ஏற்படும் **மூன்று** கட்டுப்பாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க.

**3.** அட்டவணை **1** இல், 2019 இல் அறிவிக்கப்பட்டதன்படி, இலங்கையின் சில மாவட்டங்களில் 2,000 க்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**

இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களுக்கான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை - 2019

| மாவட்டம் | டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 2 049 |
| புத்தளம் | 2 257 |
| மாத்தளை | 2 445 |
| கேகாலை | 2 716 |
| மட்டக்களப்பு | 2 848 |
| திருகோணமலை | 2 969 |
| குருணாகல் | 3 218 |
| மாத்தறை | 4 054 |
| இரத்தினபுரி | 4 086 |
| காலி | 7 378 |
| யாழ்ப்பாணம் | 8 261 |
| களுத்துறை | 8 359 |
| கண்டி | 8 940 |
| கம்பகா | 16 573 |
| கொழும்பு | 20 718 |

மூலம்: நோயியல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை 2020

(i) அட்டவணை **1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்கான எளிய பார் வரைபொன்றினை வரைந்து காட்டுக. (இதனை வரைவதற்கு வரைபுத்தாள் ஒன்றினைக் கேட்டுப் பெற்றுக்கொள்க.) (06 புள்ளிகள்)

(ii) நீர் வரைந்த வரைபினை அடிப்படையாகக் கொண்டு, தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் பரம்பலில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) எளிய பார் வரைபின் மூலம் தரவுகளை எடுத்து காட்டுவதனால் ஏற்படும் **இரண்டு** நன்மைகளையும் **இரண்டு** தீமைகளையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) அட்டவணை **1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறு ஏதாவது பொருத்தமான வரைபு முறையினை வரைந்து காட்டுவதற்கான படிமுறைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

22 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

## பகுதி I - பௌதிகப் புவியியல்

1. (i) உலகில் பனிக்கட்டியாறுகள் காணப்படும் **நான்கு** பிரதான பகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (ii) பள்ளத்தாக்குப் பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் **மூன்று** வழிகளில் இடம்பெறும் அரித்தலைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (iii) கண்டப் பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் அரித்தல் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் **மூன்று** நிலவுருவங்களைப் பொருத்தமான வரைபடங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) கண்டப் பனிக்கட்டியாற்றுப் பிரதேசங்களில் படிதலினால் உருவாக்கப்படும் **மூன்று** நிலவுருவங்களைப் பொருத்தமான வரைபடங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

2. (i) கெப்பனின் உலகக் காலநிலைப் பாகுபாட்டின் **நான்கு** பிரதான வகைகளைப் பொருத்தமான எழுத்துக்களுடன் பெயரிடுக. (02 புள்ளிகள்)

   (ii) கெப்பனின் உலகக் காலநிலைப் பாகுபாட்டு வகைகளுள் நீர் கற்றுக்கொண்ட **ஒரு** வகையினைத் தெரிவுசெய்து அதன் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (iii) இலங்கையில் தென்-மேல் மொன்சூன் பருவகால மழைவீழ்ச்சியின் புவியியல் ரீதியான பரம்பல் பாங்கின் **மூன்று** பிரதான பண்புகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (iv) இலங்கையின் ஈர வலயத் தாவரப் போர்வையின் மீது தென்-மேல் மொன்சூன் மழையின் தாக்கத்தினை **மூன்று** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

3. (i) 'இயற்கை இடர்' மற்றும் 'அனர்த்தம்' என்ற பதங்களினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   (ii) உலகில் காணப்படும் பின்வரும் இயற்கை இடர்களில் ஏதாவது **ஒன்றின்** முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக.

   (a) வெள்ளப் பெருக்குகள் (b) நிலச்சரிவுகள் (c) புவிநடுக்கங்கள் (06 புள்ளிகள்)

   (iii) மேலே (ii) இல் உம்மால் தெரிவுசெய்யப்பட்ட இயற்கை இடரினால் மானிடச் சூழலில் ஏற்படுத்தப்படும் **மூன்று** தாக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால், அனர்த்த முகாமைத்துவ வட்டத்தில் உள்ள முன்-ஆயத்த நிலையின் கீழ் எடுக்கப்பட்டுவரும் **மூன்று** படிநிலைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

4. (i) இலங்கையில் அரசாங்க சூழலியல் நிறுவனங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நிறுவனங்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து அதன் தொழிற்பாடுகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கை போன்றதொரு நாட்டிற்கு சூழலியல் நிறுவனங்கள் ஏன் அவசியமானது என்பதற்கான **மூன்று** காரணங்களை உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் சூழலியல் நிறுவனங்கள் எதிர்நோக்கும் **மூன்று** கட்டுப்பாடுகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. **அட்டவணை 1** இல் 1950 - 55 தொடக்கம் 2015 - 20 வரைப்பட்ட காலத்துக்கான உலகின் பருமட்டான இறப்பு வீதம் பற்றிய தரவுகள் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை** 1 : உலகின் பருமட்டான இறப்பு வீதம்

| வலயம் | 1950-55 | 1970-75 | 1990-95 | 2010-15 | 2015-20 |
|---|---|---|---|---|---|
| அதிகம் விருத்தியடைந்த நாடுகள் | 10.6 | 9.5 | 10.0 | 9.9 | 10.2 |
| குறைவாக விருத்தியடைந்த நாடுகள் | 23.1 | 12.9 | 8.9 | 7.2 | 7.0 |
| ஆபிரிக்கா | 26.7 | 18.7 | 14.3 | 9.3 | 8.2 |
| ஆசியா | 22.6 | 12.0 | 8.0 | 6.9 | 6.9 |
| ஐரோப்பா | 11.2 | 10.2 | 11.2 | 10.9 | 11.0 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 15.5 | 9.5 | 6.5 | 6.0 | 6.3 |
| வட அமெரிக்கா | 9.5 | 9.2 | 8.6 | 8.1 | 8.6 |
| ஓசானியா | 13.3 | 9.5 | 7.6 | 6.9 | 6.8 |

மூலம்: ஐக்கிய நாடுகள், குடித்தொகைப் பிரிவு, உலக குடித்தொகை அறிக்கை, 2019

(i) “பருமட்டான இறப்பு வீதம்” என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள உலகின் பருமட்டான இறப்பு வீதத் தரவுகளிலிருந்து இனங்காணக்கூடிய முனைப்பான அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட முனைப்பான அம்சங்களுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து அந்த ஒவ்வொரு அம்சத்துக்கும் பொறுப்பான **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) சுதந்திர காலத்திலிருந்து இலங்கையின் பருமட்டான இறப்பு வீதத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சிக்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

6. (i) விவசாயத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பிரயோகிக்கப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப முறைகளைக் கொண்டிருக்கும் **இரண்டு** துறைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட துறைகளுள் **ஒன்றினைத்** தெரிவுசெய்து, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் புதிய தொழில்நுட்பம் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதை **இரண்டு** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) விவசாயத்தில் பிரயோகிக்கப்பட்டுவரும் புதிய தொழில்நுட்பத்தின் மோசமான பாதிப்புக்கள் **மூன்றினைப்** பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(iv) மேலே (iii) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட மோசமான பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளைச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers

**7.** (i) பிரித்தெடுத்தல் கைத்தொழில் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) உலகின் இரும்புத் தாதுப் படிவுகளின் புவியியல் ரீதியான பரம்பல் பாங்கில் காணப்படும் **மூன்று** முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) உலகின் இரும்புத் தாது வர்த்தகத்தில் காணப்படும் **மூன்று** போக்குகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலகில் பிரித்தெடுத்தல் கைத்தொழில் எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

**8.** (i) இலங்கையின் பிரதான பரும்படியாக்கக் கைத்தொழில்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட பரும்படியாக்கக் கைத்தொழில்களுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவுசெய்து அதன் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) அரசாங்கக் கொள்கைகளுடன் தொடர்புபட்ட முறையில் இலங்கையின் பரும்படியாக்கக் கைத்தொழில்களில் காலரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் பரும்படியாக்கக் கைத்தொழில் எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

***

VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers

WWW.PastPapers.WIKI
VISIT: Past Papers WiKi - Most Extensive Wikipedia of Past Papers